**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.466/2021**

**<u>தேதி : 23.09.2024</u>**

**<u>(பி.வா.சா. 2) – திரு. பச்சைமுத்து</u>**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

**<u>குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில் )</u>**

நான் பிரதிவாதி பழனிக்குமாருக்கு உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பிரஸ்ஸில் கூலி வேலை செய்கிறேன். நான் கவுன்சிலராக இருந்தேனா என்றால் ஆமாம். எந்த ஆண்டு என்றால் 2006 ஆம் ஆண்டு. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தகப்பனார் கிரையம் வாங்கியதாகச் சொன்னால் சரிதான். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் நான் சிறுவயதாக இருக்கும்போது வாங்கினார். எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர் இருந்தாரா என்றால் எனது பெரியப்பா மாணிக்கம் இருந்தார். எனது தகப்பனார், எனது பெரியப்பா அந்த வீட்டில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எனது பெரியப்பா மாணிக்கம் எந்த வருடம் இறந்தார் என்றால் அவர் இறந்து 8 வருடம் ஆகிறது. அவர் இறக்கும் வரை அந்த வீட்டில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். அதன்பிறகு தான் எனது சகோதரர் குடி வருகிறார் என்றால் சரிதான். அதன்பிறகு தான் எனது சகோதரருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து அல்ல என்றால் சரியல்ல, அவர் ரூ.1000/–க்கு கிரையம் வாங்கியுள்ளார். எனது தகப்பனார் கிரையம் வாங்கவில்லை என்றும், அவருடைய தாயார் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாரின் தாயார் கிரையம் வாங்கி எனது தகப்பனாரும், அவரது சகோதரரும் அனுபவித்து வந்து, என் பெரியப்பா இறந்தபிறகு அவரது மகனாகிய பழனிக்குமாருக்கு கொடுத்துள்ளதாக எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணத்தில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியன் டாய்லட் தான் இருந்தது என்றால்

சரியல்ல. எனது தகப்பனார் குடியிருந்ததற்கு முன்பு வாதிகளின் முன்னோர் குடியிருந்தபோது கூட்டாக மேற்படி கழிப்பறையை பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல, அவ்வாறான கழிப்பறையே அப்போது இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள சங்கதிக்கு முரணாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. அந்த சொத்தில் நான் குடியிருக்கவில்லையா என்றால் எனது திருமணத்திற்கு முன்பாக அங்கு குடியிருந்தேன், அதன்பிறகு நான் அங்கு குடியிருக்கவில்லை. எனது சகோதரருக்கும், வாதிகளுக்கும் கழிப்பறை சம்மந்தமாக பிரச்சனை நடந்தது எனக்கு தெரியுமா என்றால் பிரச்சனை இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது சகோதரர் கழிப்பாறை இடித்ததாக காவல் நிலையத்தில் என் சகோதரர் மீதும், அவரது மகன் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம், ஆனால் எதிர்தரப்பு தான் முதலில் சுவற்றை இடித்தார்கள். எதிர்தரப்பினர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் நாங்கள் புகார் கொடுக்கவில்லை. எனது தகப்பனார் மற்றும் பெரியப்பா இருந்த காலத்தில் பொதுவாகத் தான் மேற்படி கழிப்பறை பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. எனது சகோதரர் குடிவந்த பிறகு அவ்வப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அரசியல் பின்புலத்தில் இருப்பதால் எனது சகோதரருக்கு அந்த சொத்து வந்தபிறகு இடத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காக வாதிகளிடம் நாங்கள் பிரச்சனை செய்வதாகச் சொன்னால் சரியல்ல. தாவா வழக்கைப் பற்றியும், இடத்தைப் பற்றியும் முழுமையாகத் தெரியாமல் நான் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும், தற்போது நான் சாட்சியளிப்பதிலும் முரண்பாடுகள் இருப்பதாகச் சொன்னால் சரியல்ல. எனது சகோதரருக்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.09.23 20:05:15 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி